www.freetnbooks.com

V6S

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறி தேர்வு - செப்டம்பர் 2025

-----

## வகுப்பு 6

நேரம்: 2.00 மணி **அறிவியல்** மதிப்பெண்கள்: 60

**I. சரியான விடையைத் தேர்வு செய்க:** **5×1=5**

1) ஒரு மரத்தின் சிற்றளவை அளவிடப் பயன்படுவது

அ) மீட்டர் அளவுகோல் ஆ) மீட்டர் கம்பி

இ) பிளாஸ்டிக் அளவுகோல் ஈ) அளவுநாடா

2) தூற்றுதல் என்ற செயலை நிகழ்த்த பின்வருவனற்றுள் ............. அவசியம் தேவைப்படுகிறது.

அ) மழை ஆ) மண் இ) நீர் ஈ) காற்று

3) இலைத்துளையின் முக்கிய வேலை

அ) நீரைக் கடத்துதல் ஆ) நீராவிப்போக்கு

இ) ஒளிச்சேர்க்கை ஈ) உறிஞ்சுதல்

4) எந்த விலங்கு செவுள்கள் எனப்படும் சுவாச உறுப்பைப் பெற்றுள்ளது?

அ) மண்புழு ஆ) குள்ளநரி இ) மீன் ஈ) தவளை

5) ஸ்கர்வி ............ குறைபாட்டினால் உண்டாகிறது.

அ) வைட்டமின் A ஆ) வைட்டமின் B

இ) வைட்டமின் C ஈ) வைட்டமின் D

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:** **5×1=5**

6) 1மீ = ................ செ.மீ.

7) மண்பாண்டம் செய்பவரின் சக்கரத்தின் இயக்கம் ............... இயக்கமாகும்.

8) பருப்பொருள் என்பது ................ ஆல் ஆனது.

9) அமீபா ............. உதவியுடன் இடப்பெயர்ச்சி செய்கிறது.

10) வைட்டமின் D குறைபாடு ............... நோயை ஏற்படுத்துகிறது.

**III. பொருத்துக:** **5×1=5**

11) அ) கிலோ - நுண்செயலி

ஆ) எளிதில் அழுத்தலாம் - ஒருவித்திலைத் தாவரங்கள்

இ) பாலைவனம் - பருத்தி, கம்பளி

ஈ) சல்லி வேர்த்தொகுப்பு - $10^3$

உ) நான்காம் தலைமுறை - வறண்ட இடங்கள்

**IV. ஒப்புமையின் அடிப்படையில் நிரப்புக:** **5×1=5**

12) மனிதனின் உயரம் : செ.மீ ::

கூர்மையான பென்சில் முனையின் நீளம் : ...............

13) பந்தை உதைத்தல் : தொடுவிசை :: இலை கீழே விழுதல் : ................

14) திண்மம் : கடினத்தன்மை :: வாயு : ................

15) உமி தானியங்கள் : தூற்றுதல் ::மரத்தூள் சுண்ணக்கட்டி : ................

16) வைட்டமின் D : ரிக்கெட்ஸ் :: வைட்டமின் C: ...............

**V. சரியா? தவறா? தவறாக இருப்பின் திருத்தி எழுதுக:** **5×1=5**

17) முழம் என்பது நீளத்தை அளவிடப் பயன்படுத்தப்படும் நம்பகமான முறை ஆகும்.

18) திண்மத்தில் உள்ள துகள்கள் எளிதில் நகர்கின்றன.

19) காற்று ஒரு தூய பொருளாகும்.

20) பசுந்தாவரங்களுக்கு சூரியஒளி தேவை.

21) ஒரு செல் உயிரியான அமீபா போலிக்கால்கள் மூலம் இடப்பெயர்ச்சி செய்கின்றது.

**VI. சுருக்கமாக விடையளி: (ஏதேனும் 10 வினாக்களுக்கு மட்டும்)** **10×2=20**

22) i) நிறையின் SI அலகு என்ன?

ii) ஒரு அளவீட்டில் இருக்கும் இரு பகுதிகள் யாவை?

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com


23) நிறை - வரையறு.

24) பொருள் நகரும் பாதையின் அடிப்படையிலான இயக்கங்களைக் கூறுக.

25) சுழற்சி இயக்கம், வளைவுப்பாதை இயக்கம் வேறுபடுத்துக.

26) விசை - வரையறு.

27) கலவைகளை நாம் ஏன் பிரித்தெடுக்க வேண்டும்?

28) படிய வைத்தல் - வரையறு.

29) பருப்பொருள் - வரையறு.

30) வாழிடத்தை அடிப்படையாகக் கொண்டு தாவரங்களை வகைப்படுத்துக.

31) நிலவாழிடம் மற்றும் நீர்வாழிடத்தை வேறுபடுத்துக.

32) பாலைவனத் தாவரங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

33) **பின்வருவனவற்றை சரியான வரிசையில் எழுதுக:**

i) இலைகள் - தண்டு - வேர் - மலர்கள்

ii) நீராவிப்போக்கு - கடத்துதல் - உறிஞ்சுதல் - ஊன்றுதல்

34) அமீபாவின் இடப்பெயர்ச்சி உறுப்பு எது?

35) இந்தியாவில் ஒட்டகங்களை நாம் எங்கு காண முடியும்?

36) **பின்வருவனவற்றை நிறைவு செய்க:**


i) ஒரு செல்லால் ஆன உயிரினங்கள் ............. என்று அழைக்கப்படுகின்றன.

ii) மீனின் சுவாச உறுப்பு ............. ஆகும்.

37) வைரஸால் ஏற்படும் நோய்கள் இரண்டினை எழுது.

38) சரிவிகித உணவு - வரையறு.

39) **நிரப்புக:**




40) கணினி என்றால் என்ன?

**VII. *விரிவான விடையளி:* (எவையேனும் மூன்று மட்டும்)** **3×5=15**

41) இயக்கம் என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.

42) திட, திரவ மற்றும் வாயுப் பொருள்களின் பண்புகளை வேறுபடுத்துக.

43) வேர் மற்றும் தண்டு ஆகியவற்றின் பணிகளைப் பட்டியலிடுக.

44) பாலைவனங்களில் வாழ்வதற்கேற்ப ஒட்டகங்களில் காணப்படும் தகவமைப்புகளை விவரி.

45) வைட்டமின்கள் குறைபாட்டால் ஏற்படும் நோய்களை அட்டவணைப்படுத்துக.

-------

www.freetnbooks.com | FREETNBOOKS